*This Question Paper contains 16 printed pages.*
***(Part - A & Part - B)***

| પ્રશ્ન પેપરનો સેટ નંબર જેની સામેનું વર્તુળ OMR શીટમાં ઘટ્ટ કરવાનું રહે છે. Set No. of Question Paper circle against which isto be darken in OMR sheet. |
|---|
| **02** |

Sl.No. 0200017

# 07 (T)

**(MARCH, 2018)**

**Part - A : Time : 1 Hour / Marks : 50**

**Part - B : Time : 2 Hours / Marks : 50**

## (Part - A)

***Time : 1 Hour]*** ***[Maximum Marks : 50***

குறிப்பு :

1) பகுதி A-யில் 50 வினாக்கள் (M.C.Q.) உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் கண்டிப்பாக விடையளித்தல் வேண்டும்.
2) 01 முதல் 50 வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.
3) ஒவ்வொரு வினாவையும் கவனமாகப் படித்து, அதற்கான பதிலை O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.
4) சரியான பதிலைத் தெரிந்து, (A) O, (B) O, (C) O, (D) O, (●) வட்டத்தில் O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.
5) கேள்வி தாள் மேல் மிக வலது பக்கத்தில் அச்சிடப்பட்ட கேள்வி தாள் எண்ணிக்கை அமைக்க O.M.R. தாள் வழங்கப்படும் பத்தியில் எழுதியுள்ளார் வேண்டும்.

1) நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடி ____ வரும்.

(A) ஐஞ்சீராய் (B) முச்சீராய்

(C) நாற்சீராய் (D) அறுசீராய்

2) ஒரு சொல் இருமுறை அடுக்கி வந்து, ஒலி, ஒளிக் குறிப்புப் பொருள் தந்தால், அதனை _______ என்பர்.

(A) இனங்குறித்தல் (B) இரட்டைக்கிளவி

(C) அடுக்குத் தொடர் (D) வெளிப்படை

3) பாம்போ ? கயிறோ ? ______ எவ்வகை வினா ?

(A) ஐய வினா (B) ஏவல் வினா

(C) அறி வினா (D) கொடை வினா

4) 'சரணகமலம்' ______ இலக்கணக் குறிப்பெழுதுக.

(A) உருவகம் (B) பெயரெச்சம்

(C) வினையெச்சம் (D) இடைப்போலி

5) 'இந்திய அரசியலில் சாணக்கியர்' என்று போற்றப் பட்டவர் யார் ?

(A) காமராஜர்

(B) மூதறிஞர் இராஜகோபாலச்சாரியர்

(C) தந்தை பெரியார்

(D) ஜவஹர்லால் நேரு

6) காடும் காடு சார்ந்த இடமும் –

(A) முல்லை (B) நெய்தல்

(C) மருதம் (D) பாலை

7) "வாழ்ந்தவர் கோடி
மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார் ?"
அவர் நடித்த திரைப்படப் பாடலுக்கு,
அவரே எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் –

(A) சிவாஜிகணேசன்

(B) பாலச்சந்தர்

(C) எம்.ஜி. இராமச்சந்திரன்

(D) எம்.ஆர். இராதா

8) "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்" என்று பயிர்வாடத் தாம் பாடியவர் –

(A) குன்றக்குடி அடிகளார்

(B) நம்மாழ்வார்

(C) குலசேகரர்

(D) இராமலிங்க இடிகளார்

9) எந்நாளில் உழைப்பின் பெருமையினை உணர்ந்து உரையாடி மகிழ வாய்ப்பு கிடைக்கிறது ?

(A) குழந்தைகள் தினம்

(B) பெற்றோர்கள் தினம்

(C) தமிழர் திருநாள் அன்று

(D) அன்னையர் தினம்

10) தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ___________.

(A) அப்பூதியடிகளார்

(B) திருநீலகண்டர்

(C) மாறநாயனார்

(D) எறிபத்தர்

11) போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ___________.

(A) பரணர்

(B) கபிலர்

(C) ஒட்டக்கூத்தர்

(D) வில்லிபுத்தூரர்

12) 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் ____________

(A) சுரதா

(B) பாரதிதாசன்

(C) பாரதியார்

(D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

13) 'யாரையோ நீ மடக்கொடி' ____________ யார், யாரிடம் கூறியது ?

(A) வாயிற்காவலன் மன்னனிடம் கூறியது.

(B) மன்னன் அரசியிடம் கூறியது.

(C) கோவலன் கண்ணகியிடம் கூறியது.

(D) பாண்டியன் கண்ணகியிடம் கூறியது.

14) "கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று வெள்வேற் கொற்றங் காண்என" ____________ இவ்வடிகள் இடம் பெற்ற காப்பியம் யாது ?

(A) சிலப்பதிகாரம்

(B) திருவிளையாடற் புராணம்

(C) பெரியபுராணம்

(D) கந்தபுராணம்

15) "தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன" ....
______ இவ்வடிகளில் யார், யாரிடம் கூறியது என்ன ?

(A) இலக்குவன் இரமானிடம் கூறியது

(B) குகன் பரதனிடம் கூறியது

(C) குகன் இராமபிரானிடம் கூறியது

(D) குகன் இலக்குனிடம் கூறியது

16) "அன்புள்ள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" ___________ இவ்வடி இடம் பெற்ற காப்பியம் எது?

(A) கம்பராமாயணம் (B) புறநானூறு

(C) மணிமேகலை (D) நற்றிணை

17) இல்லாரை எல்லாரும் ____________.

(A) எள்ளுவர் (B) எய்துவர்

(C) வெல்வர் (D) விரும்புவர்

18) "வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை"
– இவ்வடிகளில் புலி யாரை வணங்கியது ?

(A) புலி, முகம்மது நபியை வணங்கியது.

(B) புலி, ஊர்மக்களை வணங்கியது.

(C) புலி, வழிப்போக்கனை வணங்கியது.

(D) வழிப்போக்கன், புலியை வணங்கினான்.

19) "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" _____ இவ்வடி இடம் பெற்ற பாடல் எது ?

(A) திருவாசகம் (B) திருப்பாவை

(C) திருக்கோவை (D) தேவாரம்

20) திருநாவுக்கரசர் காலம் ______ ஆம் நூற்றாண்டு

(A) கி.பி. 9 ஆம் நூற்றாண்டு

(B) கி.பி. 7 ஆம் நூற்றாண்டு

(C) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு

(D) கி.பி. 10 ஆம் நூற்றாண்டு

21) இறைவனிடம் 'அழுது அடியடைந்த அன்பர்' ____ என்று யாரை அழைக்கிறோம் ?

(A) சுந்தரர் (B) அப்பர்

(C) மாணிக்கவாசகர் (D) எறிபத்தர்

22) "தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்"

– இவ்வடிகள் இடம் பெற்ற நூல் யாது ?

(A) தமிழ் விடு தூது (B) கலம்பகம்

(C) கலித்தொகை (D) உலா

23) 'பொங்கு கடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர் பெருமை'

– இவ்வடி இடம் பெற்ற புராணம் –

(A) பெரிய புராணம் (B) சிவ புராணம்

(C) விஷ்ணு புராணம் (D) தல புராணம்

24) சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப் பண்பாடும் மிளிர்கின்ற காவியம் _______.

(A) கம்பராமாயனம் (B) புறநானூறு

(C) அகநானூறு (D) நற்றிணை

25) 'தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்' – என்று கூறியவர் யார் ?

(A) வாணிதாசன் (B) சுரதா

(C) வாலி (D) பாரதிதாசன்

26) சொற்கோவிலும் கற்கோவிலும் எழுப்பியவர் யார் ?

(A) சுந்தரர் (B) அப்பர்

(C) நாயனார் (D) சேக்கிழார்

27) சைவத் திருமுறைகள் மொத்தம் எத்தனை ?

(A) பன்னிரண்டு (B) ஐந்து

(C) ஏழு (D) ஆறு

28) "சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே – இங்கு

நல்ல செடி இளைப் பாறிடுமோ"

– என்று கூறியவர் யார் ?

(A) மறைமலையடிகள்

(B) பாவாணர்

(C) சாலை இளந்திரையன்

(D) திரு.வி. கலியாண சுந்தரம் பிள்ளை

29) 'திருக்குறள்' _______ இயல்களைக் கொண்டுள்ளது.

(A) ஆறு (B) ஏழு

(C) ஐந்து (D) ஒன்பது

30) "பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்

அன்பெனப் படுவது தன்கிளை செறாசுமை"

– இவ்வடிகள் இடம் பெற்ற நூல் யாது ?

(A) கலித்தொகை (B) புறநானூறு

(C) நற்றிணை (D) குறுந்தொகை

31) இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் ______.

(A) பைபிள் (B) சீறாப்புராணம்

(C) தேம்பாவணி (D) குர்ஆன்

32) 'வேறொரு காட்டினிற் புகுக' –

இவ்வடியில் யார், யாரிடம் கூறியது ?

(A) ஊர்மக்கள், புலியிடம்

(B) முகம்மது நபி, புலியிடம்

(C) வழிப்போக்கன், புலியிடம்

(D) சிங்கம், புலியிடம்

33) திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் –

(A) மூத்த அறிவுடையார் (B) ஆர்வமுள்ள நண்பர்

(C) அன்புள்ள பெற்றோர் (D) பாசமுள்ள உறவினர்

34) 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்

பாடிய கவிவலவ' எனப் பாடியவர் –

(A) கவிஞர் வெ. இராமலிங்கனார்

(B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

(C) பெ. சுந்தரனார்

(D) திரு. வி. கலியாணசுந்தரனார்

35) பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் –

(A) பாவாணர் (B) உ. வே. சா.

(C) திரு. வி. க. (D) எமினோ

36) 48 - என்ற எண்ணின் தமிழ் எண் யாது ?

(A) ௪ ௧ (B) உ ௫

(C) ௩ அ (D) க உ

37) 'பிசிராந்தையார் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார்' – எவ்வகை வாக்கியம் ?

(A) செய்தி (B) வினா

(C) உணர்ச்சி (D) கட்டளை

38) அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் தலைகீழ்ப் புரட்சி ஏற்படும் என்றவர் –

(A) பாரதியார் (B) தந்தை பெரியார்

(C) திரு. வி. க. (D) பாவாணர்

39) வட்டமேசை மாநாட்டில், "அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" – என்று தன் கருத்தைத் தொடங்கியவர் –.

(A) அண்ணல் அம்பேத்கர் (B) காந்தியடிகள்

(C) சர்தார் படேல் (D) சுபாஷ்சந்திர போஸ்

40) அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ______.

(A) பத்மபூஷன் (B) பாரத ரத்னா

(C) பத்மஶ்ரீ (D) பத்மவிபூஷன்

41) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை –

(A) பேச்சுக்கலை (B) இசைக்கலை

(C) ஓவியக்கலை (D) சிற்பக்கலை

42) நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் ____ என அழைப்பர்.

(A) இசைக் கலைஞர் (B) இயக்குநர்

(C) ஒளிப்பதிவாளர் (D) நடனக் கலைஞர்

43) "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்

விண்ணோடும் உடுக்களோடும்"

– இவ்வடியைப் பாடியவர் யார் ?

(A) சுரதா (B) பாரதியார்

(C) பாவேந்தர் பாரதிதாசன் (D) வைரமுத்து

44) களிறு எறிந்து பெயர்தல் ______ எனப் புறப்பாடல் வீரத்தை முதல் கடமையாக்குகிறது

(A) காளைக்குக் கடனே ! (B) ஈதல்

(C) வெற்றி (D) ஒழுக்கம்

45) பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ______.

(A) எட்டாம் வகுப்பு (B) பன்னிரண்டாம் வகுப்பு

(C) பத்தாம் வகுப்பு (D) பட்டப்படிப்பு

46) ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற ____ யார் கூற்று ?

(A) திருவள்ளுவர் (B) கம்பர்

(C) புத்தர் (D) இராமலிங்க அடிகளார்

47) செம்மை, சிறுமை, சேய்மை என்பன –

(A) திசைப் பெயர்கள்

(B) அளவுப் பெயர்கள்

(C) எண் பெயர்கள்

(D) மையீற்றுப் பண்புப் பெயர்கள்

48) அகத்திணைகள் ______ வகைப்படும்.

(A) நான்கு (B) ஐந்து

(C) மூன்று (D) ஏழு

49) மருத நிலத்திற்குரிய தெய்வம் ______.

(A) இந்திரன் (B) திருமால்

(C) முருகன் (D) வருணன்

50) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ______ .

(A) வாகைத்திணை (B) காஞ்சித்திணை

(C) வஞ்சித்திணை (D) தும்பைத்திணை

# 07 (T)

**(MARCH, 2018)**

**(Part - B)**

***Time : 2 Hours]*** ***[Maximum Marks : 50***

குறிப்பு :

1) ஒரு தெளிவான கை எழுத்து எழுது.
2) பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன - கேள்வி தாள் மற்றும் மொத்த B 1 முதல் 21 கேள்விகள் உள்ள.
3) அனைத்து கேள்விகள் உள்ளன உள் விருப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4) வலது பக்க எண்கள் கேள்விகளுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
5) புதிய பக்கம் புதிய பிரிவை துவக்கவும்.
6) பகுவரிசை பராமரிக்கவும்.

## SECTION - A

■ ஆறுவரிகளில் விடையளி :-

1) ஒரு மொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை ? [2]

2) மணக் கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ? [2]

3) கல்விப் படம் குறித்துக் குறிப்பு எழுதுக. [2]

4) மனித நேயம் குறித்து காந்தியடிகள் கூறியது யாது ? [2]

சுருக்கமாக விடையளி :-

5) முதற்பொருள் என்பது யாது ? [1]

6) மாணிக்கவாசகர் பாடல்கள் எந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளன ? [1]

கோடிட்ட இடங்களை நிரப்புக :- [2]

7) உமறுப் புலவரை ஆதரித்த வள்ளல் _______ ?

8) நாள் தோறும் கல்வியில் __ உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

## SECTION - B

■ ஐந்தாறு வரிகளில் விடையளி :-

9) நந்திவர்மன் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை ? [2]

10) கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ? [2]

11) ‘இப்போது இங்கு அவன் உதவான்’ _______ விளக்குக. [2]

கீழுள்ள வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி :-

12) பொருளீட்டும் நெறியினைத் திருவள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார்? [2]

13) சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன ? [2]

சுருங்கிய விடையளி :- [3]

14) ஐம்பொறிகள் யாவை

15) பெரும்பொழுது எத்தனை வகைப் படும் ? அவை யாவை ?

16) புறத்திணைகள் நான்கினை எழுதுக. ?

## SECTION - C

17) கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க :- [5]

நாடும் மொழியும் நமது இரு கண்கள்
நாம் தினம் போற்றி வணங்கிடுவோமே
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடு வோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்திரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே ஆகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனும் மாமருந்தாலே !

<u>வினாக்கள் :-</u>

a) நமது இரு கண்களாகக் கருதப்படுவன யாவை ?

b) 'தினம்' என்பதற்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.

c) வேற்றுமை என்பதன் எதிர்ச்சொல் யாது ?

d) பாடலில் இடம் பெற்றுள்ள உரிச்சொல்லை எடுத்தெழுதுக.

e) சுதந்தரம் ___ சுதந்திரம் எது சரி ?

OR

மேலே கொடுக்கப்பட்டுள்ள பாடலின் திரண்ட கருத்தினை எழுதுக.

18) காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளைத் தொகுத்து எழுதுக. [3]

OR

குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

19) 'வாயிற் கடைமணி .......... எனத் தொடங்கி, மனைவி' என முடியும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. [5]

OR

புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? விளக்குக.

OR

'காலமறிதல்' ___ குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.

## SECTION - D

20) நும் பள்ளியில் நிகழ்ந்த 'சுதந்திர தின விழா'வினைப் பற்றி, நின் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக. [6]

21) ஒன்றினைப் பற்றி 200 சொற்களில் கட்டுரை எழுதுக. [6]

a) தந்தை பெரியார்

b) 'தந்தையர் தினம்'

c) தேசிய ஒருமைப்பாடு